
# டென்ட் டிரெஸ்

*இந்த வீடியோல நாம ஒரு டென்ட் ட்ரெஸ் தைக்கப்போறோம்*
















தேவைப்படும் பொருள்கள்

60” அகலத்தில 3 மீட்டர் துணி
நாங்க மென்மையான டெனிம் துணிய தேர்ந்தெடுத்திருக்கோம்.
டென்ட் ட்ரெஸ்க்கான டெம்ப்ளேட்ட நீங்க எங்க
www.ushasew.com
வெப்சைட்லேந்து டவுன்லோட் செய்துக்கலாம்.
சாக்
கத்தரிக்கோல்
ரூலர்
அளக்கற டேப்
மணி கோர்த்த பின்ஸ்
துணிக்கு பொருத்தமான நூல்கள்

நாங்க உங்களுக்கு டெம்ப்ளேட்படி துணில எப்படி மார்க் பண்ணி கட் பண்றது, முன், பின் பீசஸ ஜாயின் பண்றது, நெக்லைன் ஃபினிஷ் பண்றது, சைட் சீம்ஸ ஃபினிஷ் பண்றது, ஸ்லீவ் ஹெம், அப்புறம் பாட்டம் ஹெம் எல்லாம் எப்படின்னு காட்டுவோம்.

ஸ்டெப் 1 - டெம்ப்ளேட் மார்க்கிங், ஃபேப்ரிக் கட்டிங்

மென்மையான டெனிம் துணிய ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்தா மாதிரி மடியுங்க. ராங் சைட் உங்களை நோக்கி இருக்கணும்.

டெம்ப்ளேட் மார்க் பண்ணின முன்பக்கத்தை துணிமேல வையுங்க. மடிப்புல குறிப்பிட்டு இருக்கற பக்கம் துணி மடிப்புல வைக்கறதை உறுதி செய்துக்கங்க. டெம்ப்ளேட்ட சரியான இடத்தில வெச்சு மணி கோர்த்த பின் வெச்சு பின் பண்ணுங்க. துணிமேல டெம்ப்ளேட்டோட விளிம்புகளை ட்ரேஸ் பண்ண ஒரு சாக் துண்டை யூஸ் பண்ணுங்க. இது முடிஞ்சதும் டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துட்டு அதை தனியா வையுங்க. கத்தரிக்கோலை எடுத்துகிட்டு கட் பண்ணுங்க. மார்க் பண்ணின லைன்ல கட் பண்ணுங்க. இப்ப உங்களுக்கு முன் பீஸ் தயாராகிருச்சு.

இதே மாதிரி பின் டெம்ப்ளேட்ட துணிமேல வையுங்க. மடிப்புல குறிப்பிட்டு இருக்கற பக்கம் துணி மடிப்புல வைக்கறதை உறுதி செய்துக்கங்க. துணில டெம்ப்ளேட்ட பின் பண்ணி, டெம்ப்ளேட்டோட அவுட்லைனை சாக் யூஸ் பண்ணி வரைங்க. டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்திட்டு ட்ரெஸ்சோட பின் பீஸ கட் பண்ணிருங்க.

**ஸ்டெப் 2- ஷோல்டர்ஸ ஸ்லீவோட தைச்சு முன், பின் பீசஸ ஜாயின் செய்தல்.**












இப்ப நீங்க கட் பண்ணின பின் பக்க துணிய விரிச்சு, டேபிள் மேல ராங் சைட் கீழ் பக்கமா இருக்க மாதிரி வையுங்க. இதுதான் துணியோட ராங் சைட், இதுதான் துணியோட ரைட் சைட். ட்ரெஸ்சோட முன் பீஸ பின் பீஸ் மேல வையுங்க. நாம இதை ஒன்னா சேர்த்து தைக்கப்போறோம். இதுல காட்டியிருக்க மாதிரி ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும்.

நாம ஷோல்டர்லேந்து ஸ்லீவ்வரை தைக்கப்போறோம். ரெண்டு பீசஸயும் மணி கோர்த்த பின்ஸ வெச்சு பின் பண்ணுங்க. பின் பண்ணின துணிய உஷா ஜானோம் வொண்டர் ஸ்டிட்ச் பிளஸ் மிஷினுக்கு கொண்டு போங்க. ஒரு ஸ்லீவோட முனைய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வையுங்க. ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ஏ-க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிக்கங்க. தைக்க ஆரம்பிங்க. தையல் பிரியாம இருக்க ஆரம்பத்தில ஒரு ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க. ஸ்லீவ் மொத்தமும் தையுங்க, நெக் வரும்போது நிறுத்துங்க. முடியற இடத்திலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க.

இப்ப ஒட்டுமொத்த பிராசஸ இன்னொரு ஸ்லீவுக்கும் ரிபீட் பண்ணுங்க. நூலை கட் பண்ணிருங்க. தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும். துணி விளிம்புல நூல் தொங்காம இருக்க விளிம்புல ஜிக் ஜாக் தையல் போடலாம். பிரஸ்ஸர் ஃபூட்க்கு அடியில ஸ்லீவ அலைன் பண்ணிக்கங்க. ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ‘சி’க்கும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணிகிட்டு கழுத்து பக்கமா ஸ்லீவ நோக்கி தைக்க ஆரம்பிங்க. ஜிக் ஜாக் தையல் போடறப்ப ரிவர்ஸ் ஸ்ட்ரிச் தேவையில்லை. அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. இந்த ஸ்லீவ் முடிஞ்சதும் இதே பிராசஸ இன்னொரு ஸ்லீவுக்கும் ரிபீட் பண்ணுங்க. தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும்

ஸ்டெப் 3 நெக்லைன் ஃபினிஷிங்










நெக்லைனுக்கு ரொம்ப சரியான ஃபினிஷிங் கொடுக்க, நமக்கு பயாஸ் ஸ்ட்ரிப் தேவை. கவலப்படாதீங்க, இந்த ஸ்ட்ரிப்ப எப்படி கட் பண்றதுன்னு நாங்க சொல்லித் தரோம். மீதி உள்ள துணிய எடுத்துக்கங்க. இதுல காட்டியிருக்க மாதிரி ஒரு ஸ்கேலை எடுத்துகிட்டு, 45 டிகிரி ஆங்கிள்ல டையக்னலா கோடு வரையணும்-மீதி உள்ள துணிய எடுத்துக்கங்க. லைன்லேந்து நேர் கோடா வர்றதை உறதி செய்ய வெவ்வேறு பாயின்ட்ஸ்ல டேப்பால 1.5 அங்குலம் மார்க் பண்ணிக்கங்க. மார்க் பண்ணினதை லைனா கனெக்ட் பண்ணுங்க. கழுத்துக்கு ஒன்னு, ஸ்லீவ்க்கு ரெண்டுன்னு நமக்கு மூணு பயாஸ் ஸ்ட்ரிப் தேவைப்படுங்கறதால, இதே பிராசஸ இன்னும் ரெண்டு தடவை ரிபீட் பண்ணுங்க. மார்க்கிங் எல்லாம் செய்து முடிச்சதும், கத்தரிகோலை எடுத்துகிட்டு இந்த ஸ்ட்ரிப்ஸ கட் பண்ணிருங்க. துணியோட மேல் அடுக்கை மட்டும்தான் கட் பண்றீங்களான்னு பார்த்துக்கங்க. நம்ப பயாஸ் ஸ்ட்ரிப் தயார்.






ஸ்ட்ரிப்பையும் டிரெஸ்ஸயும் மிஷினுக்கு கொண்டு போங்க. நெக்லைன் முடிக்க இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்ட்ரிப்ப ரைட்-சைட் ராங் சைட்-அ நோக்கி இருக்கமாதிரி ஷோல்டர் ஜாயின்ட்ல வையுங்க. துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைங்க. ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ஏ-க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிக்கங்க. கழுத்து முழுக்க கிட்டத்தட்ட முடியறவரை தையுங்க. தொடக்கப் புள்ளிக்கு கொஞ்சம் முன்னால மிஷினை நிறுத்துங்க. துணிய வெளிய எடுங்க, ஸ்ட்ரிப் சைட்ஸ ஷோல்டர் ஜாயின்ட்ல வெச்சு, ஒரு தையல் போட்டு ஜாயின்ட்ட செக்யூர் பண்ணுங்க. கத்தரிக்கோலால கூடுதலா உள்ள ஸ்ட்ரிப்ப ட்ரிம் பண்ணுங்க. இதுக்கு முன்னால விட்ட கேப்-அ தையுங்க, அப்பதான் பயாஸ் ஸ்ட்ரிப் முழுசா நெக்லைனோட அட்டாச் ஆகியிருக்கும்.




அடுத்த பார்ட்-ல கவனம் செலுத்தணும். பயாஸ் ஸ்ட்ரிப்ப ரைட் சைட்-அ நோக்கி ¼ அங்குலம் மடிங்க மறுபடியும் சீம் அலவன்ஸ் மேல மடிங்க. துணியோட ரைட் சைட்-லேந்து மடிப்பை ஒரு எட்ஜ் ஸ்ட்ரிச் போட்டு செக்யூர் பண்ணுங்க. சரியான ஃபினிஷிங் வர கூடுதலா உள்ள நூலை கட் பண்ணிருங்க.






நெக் பாக்க இப்படித்தான் இருக்கணும்.




ஸ்டெப் 4 - சைட் சீம்-ஐ முடித்தல்

சைட் சீம்- முடிக்க ஸ்லீவ்ஹெம்மிலிருந்து தைக்க தொடங்கி, ட்ரெஸ்சோட பாட்டம் வரை தையுங்க. ஸ்லீவோட என்ட்-அ ஓபன் பண்ணி பிரஸ்ஸர் ஃபூட்க்கு அடியில வெச்சு நேர் தையல் போடுங்க. ஆர்ம் ஹோல் பக்கத்தில வர்றப்ப கவனமா இருங்க அப்பதான் சரியான தையல் கிடைக்கும். அடிப்பகுதிக்கு வந்த உடனே அதிகமா உள்ள நூலை கட் பண்ணுங்க. இப்ப ஃபினிஷிங் டச்சுக்கு விளிம்புல ஜிக் ஜாக் தையல் போடலாம். ஸ்லீவோட ஓபன் என்ட்-அ பிரஸ்ஸர் பூட் அடியில வெச்சு நேர் தையல் போட ஆரம்பிங்க. ஸ்லீவ பிரஸ்ஸர் பூட் அடியில வெச்சு ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ‘சி’க்கும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணிகிட்டு ஸ்லீவ்லேந்து ட்ரெஸ்சோட அடிப்பகுதி வரை ஜிக் ஜாக் தையல் போடுங்க. இது முடிஞ்சதும், தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும். ஆர்ம்-க்கு அடியில ஸ்லாஷஸ் கொடுக்கணும் சீம் சுருங்காம இருக்க ஸ்லாஷ் செய்யப்படுது.






இந்த தையலின் ஒட்டுமொத்த பிராசஸ ரிபீட் பண்ணனும், தொடர்ந்து ஜிக் ஜாக் தையல் போடணும் அப்புறம் ட்ரெஸ்சோட இன்னொரு சைடின் ஆர்ம் ஹோல் அடியில ஸ்லாஷிங் பண்ணனும்.















### ஸ்டெப் 5- ஸ்லீவ் ஹெம்-அ ஃபினிஷ் செய்தல்

நாங்க முன்னால குறிப்பிட்ட ரெண்டு பயாஸ் ஸ்ட்ரிப் ஸ்லீவ்ஸ்காக ஒரு பயாஸ் ஸ்ட்ரிப் பீஸ எடுத்து அதை டிரெஸ்சோட ஸ்லீவ் எட்ஜ் மேல அதை வையுங்க. பயாஸ் ஸ்ட்ரிப்போட ஒரு பீசோட ரைட் சைட் ராங் சைட்-அ பாத்துட்டு இருக்கணும். சர்குலர் சீம்ஸ் தைக்க வசதியா மிஷினோட ஆக்சஸரி பெட்டை எடுத்துருங்க. துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அட்ஜஸ்ட் பண்ணுங்க. ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ஏ-க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிக்கொங்க தைக்க ஆரம்பிங்க. ஏறக்குறைய கடைசி வரை தையுங்க. இப்ப கழுத்து மாதிரியே, சுமார் ஒரு அங்குல பயாஸ் ஸ்ட்ரிப் எடுத்துகிட்டு வீடியோல காட்டின மாதிரி அது முழுக்க நேர் தையல் போடுங்க. கத்தரிகோலால அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. இப்ப ஸ்லீவ ரைட் சைட்-ல திருப்புங்க. பயாஸ் ஸ்ட்ரிப்ப கால் அங்குலத்துக்கு மடியுங்க, அப்றம் மறுபடியும் சீம் லைன் மேல மடியுங்க. மிஷினுக்கு அடியில ஸ்லீவ வைச்சு அது எட்ஜ்ல முழுவதும் நேர்த்தையல் போடுங்க. அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. உங்க ஸ்லீவ் வேலை முடிஞ்சுது. நீங்க ஃபினிஷ் பண்ணின ஸ்லீவ் பாக்க இப்படித்தான் இருக்கணும். இன்னொரு ஸ்லீவுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க.






### ஸ்டெப் 6- பாட்டம் ஹெம்-ஐ ஃபினிஷ் செய்தல்

இது ரொம்ப ஈசி. ட்ரெஸ்சோட பாட்டமை இதுல காட்டி இருக்க மாதிரி ரெண்டு தடவை அரை அங்குலம் மடியுங்க. அடிப்பகுதியில் மடிப்பில் நேர் தையல் போடுங்க. அடிப்பகுதி ஹெம்லைன் முடிஞ்சிருச்சு. இப்ப நீங்க ஒரு டென்ட் ட்ரெஸ் தயாரிக்கற ஒட்டுமொத்த பிராசஸயும் வெற்றிகரமா கடந்துவந்துட்டீங்க. உங்களுக்கு நீங்களே ஒரு சபாஷ் கொடுத்துருங்க




இப்ப நீங்க உருவாக்கின டென்ட் ட்ரெஸ்ஸ மேலும் சிறப்பாக்க அதை அழகுபடுத்தறது ஒரு அருமையான ஆப்ஷன். இந்த ரிப்பன் சீக்குவன்ஸ் மார்க்கெட்ல இப்ப கிடைக்கறதால நீங்க உங்க கிரியேடிவிட்டிய தூண்டிவிடலாம். உஷா ஜானோம் ரிப்பன் சீக்குவன்ஸ் ஃபூட்-அ யூஸ் பண்ணி இப்ப நீங்க உருவாக்கின டென்ட் ட்ரெஸ்ஸ மெருகேத்தலாம். இந்த ஃபூட்-அ எப்படி யூஸ் பண்ணனும்னு தெரிஞ்சுக்க எங்க www.ushasew.com வெப்சைட்டை விசிட் பண்ணுங்க, அதே போல எங்க டுடோரியலையும் பாருங்க.



இப்ப நீங்க உருவாக்கினதுல உங்களுக்கு பெருமையா இருக்குல்ல. ஒரு படம் எடுத்து உங்க நண்பர்களோட ஷேர் பண்ணிக்கங்க அல்லது உங்க சோஷியல் மீடியா ஹான்ட்லர்சுக்கு அப்லோட் பண்ணிக்கங்க. இந்த டென்ட் ட்ரெஸ்ஸ பல்வேறு வழிகள்ல செம்மைபடுத்தலாம், அழகுபடுத்தலாம், மேம்படுத்திக்கலாம்.